DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 52/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | :வேளாங்கன்னி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 05th June 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் மீன்துள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரிக்கு எனக்கும் 2010ம் வருடம்திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு ஒரு பெண்குழந்தை உள்ளது. எனக்கு குழந்தை பிறந்து 3 மாதம் கழித்து எதிரி புதுஅம்மாள் என்ற பெண்ணிடம் தொடர்பு வைத்துக்கொண்டார், நான் அது சம்பந்தமாக எனது கணவரிடம் கேட்டபோது நீ உண்மைனா என்னை கண்டுபிடித்துக்கொள் என்று அடிக்கடி கூறிவந்தார். தேதி மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. 2011ம் வருடம் ஒரு நாள் மீன்துள்ளியில் உள்ள புதுஅம்மாள் வீட்டிற்கு இரவு 8 மணிக்கு நான் போனேன். புதுஅம்மாளிடம் நான் எனது கணவரிடம் நீங்கள் சேர்ந்து இருக்கவேண்டாம் என்று சொன்னேன். அதற்கு எதிரி என்னை பார்த்து நான் அப்படிதான் போவேன் உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று சொல்லி எனது கழுத்தை பிடித்து நெறித்தார். தேவடியாமுண்ட நீ ஒரு

அப்பனுக்கு பிறந்தால் நான் புதுஅம்மாளிடம் போறதை நிரூபித்துவிடு, நான் புதுஅம்மாளிடம போறதை நீ கண்டுகொள்ளாமல் இருந்தால் நான் உன்னிடம் எந்த பிரச்சனையும் செய்யமாட்டேன், அடிக்கமாட்டேன், உன்னை நன்றாக வைத்துவாழ்வேன் என்று சொல்லி எனது கழுத்தை பிடித்து நெறித்தார், நான் கீழே மயங்கி விழுந்துவிட்டேன். அன்று இரவு என்னை ஊர்க்காரர்கள் புதுஅம்மாள் வீட்டு பக்கத்தல் உள்ள கிணற்றிலிருந்து என்னை தூக்கி மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருக்கிறாரகள். அந்த விபரம் நான் மருத்துமவனையில் சிகிக்சைக்கு சேர்ந்து இரவு சுமார் 9.00 மணியளவில் எனக்கு தெரியவந்தது. நான் எதிரி அடித்ததில் புதுஅம்மாள் வீட்டில்தான் மயங்கி விழுந்தேன். எதிரியும், புதுஅம்மாளும் சேர்ந்துதான் என்னை கிணற்றில் தூக்கி போட்டிருக்கிறார்கள். சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி செய்துவிட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். எதிரியும் புதுஅம்மாளும் என்னை கம்பியால் இடதுகால் முட்டிற்கு கீழ் அடித்தார்கள். (சாட்சி இடதுகால் முட்டிக்கு கீழ் ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட தழும்பினை காட்டினார்). அடித்த அடியில் நான் மயங்கி விழுந்ததால் நான் செத்துப்போயிருப்பேன் என்று நினைத்து எதிரியும், புதுஅம்மாளும் என்னை கிணற்றில் தூக்கி போட்டிருக்கிறார்கள். நான் சங்கரன்கோவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும்புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்தபுகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்**. சம்பவ காலத்தில் நான் சுமார் 4 வருடங்களாக திருநெல்வேலி அரசு மருத்துமவனையிலேயே உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 52/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | :ராயர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 05th June 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் மீன்துள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மருமகன். எதிரிக்கும், எனது மகளுக்கும் திருமணமாகி சுமார் 11 வருடம் ஆகிறது. அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. எதிரி பூதம்மாள் என்ற ஒரு பெண்ணை சேர்த்து வைத்துக்கொண்டு அடிக்கடி எனது மகளுடன் தகராறு செய்து வந்துள்ளார். தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2011ம் வருடம் ஒரு நாள் நான் கோழிப்பண்ணைக்கு வேலைக்கு போய்விட்டேன். எனது மகள் இரவு சுமார் 8 மணியளவில் பூதம்மாள் வீட்டிற்கு சென்று பூதம்மாளை பார்த்து நீ ஏன் எனது கணவருடன் பேசிக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டுள்ளார். எதிரியும், பூதம்மாளும் சேர்ந்துகொண்டு எனது மகளை கம்பியால் இடதுகாலில் அடித்துள்ளார்கள். அ.சா.1 யை மருத்துவமனைக்கு கொண்டுவந்தபின்னர்

எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் சம்பவம் கேள்விப்பட்டு நேராக சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். எனது மகளுக்கு இடதுகாலில் காயம் இருந்தது. சங்கரன்கோவில் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்துவிட்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எனது மகளிடம் விபரத்தை கேட்டபோது எதிரி காமராஜரும், பூதம்மாளும் எனது மகளை அடித்து கிணற்றிற்குள் தூக்கி போட்டுவிட்டதாக தகவல் சொன்னார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சிக்கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 ன் சாட்சிக் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**